Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 262 | உள்ளூர் - 20.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 262 | வெளியூர் - 21.09.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

திருமணம் தாமதமாகிறதா? வாஸ்து குறிப்புகள்!

மத்திய அரசு நிறுவனத்தில் 28 பணியிடங்கள்!

சிவாஜி மகள் சாந்தி காலமானார்!

சிவாஜி மகள் சாந்தி காலமானார்!

# துணை ஜனாதிபதி கோவை வருகை- டிரோன்கள் பறக்க தடை!






கோவை, செப். 20–

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள செப். 21 (திங்கட்கிழமை) கோவை வருகிறார். தனி விமானம் மூலம் டெல்லியில் இருந்து புறப்பட்டு கோவை விமான நிலையத்திற்கு வருகி றார். அவரை கலெக்டர் பவன்குமார் மற்றும் அமைச்சர்கள் வரவேற்க உள்ளனர். துணை ஜனாதிபதி கோவை வருகையை முன்னிட்டு டிரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து கோவை மாவட்ட கலெக்டர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் நாளை கோவைக்கு வருகிறார். இதனை முன்னிட்டு பாதுகாப்பு கருதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி முதல் வருகிற 22–ந் தேதி காலை 11 மணி வரை கீழ்கண்ட பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது. அதன்படி கோவை மாவட்டத்தில் ஏற்கனவே சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுடன், காளப்பட்டி 4 ரோடு சந்திப்பு, கோவில்பாளையம், அன்னூர் பஸ் நிலையம், தென்திருப்பதி 4 ரோடு ஆகிய இடங்களில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இதுதவிர மேட்டுப்பாளையம் பஸ் நிலையம், வனக்கல்லூரி விருந்தினர் இல்லம், குஞ்சப்பனை மாவட்ட எல்லை, கஞ்சப் பள்ளி, கரியம்பாளையம் சந்திப்பு, கணியூர் சுங்கச்சாவடி, நீலாம்பூர் ஆகிய பகுதிகள் மற்றும் சிங்காநல்லூர், பீளமேடு. சித்ரா, நேரு நகர், சேரன்மா நகர், எஸ்.ஐ.எச்.எஸ். காலனி, சின்னியம்பாளையம், நவ இந்தியா, இருகூர் பகுதிகள் ஆகியவை தற்காலிக சிவப்பு மண்டல பகுதிகளாக அறிவிக்க ப்பட்டு டிரோன்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது. இந்த பகுதிகளில் தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி ஊர்திகளை பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# முதல்வர் விஜய் 2 நாள் பிரசாரம்!



சென்னை, செப். 20–

மதுராந்தகம் தொகுதி தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து முதல்வர் விஜய் இரண்டு நாட்கள் தீவிரப் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். செப்டம்பர் 25 அன்று அச்சரப்பாக்கத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார். அக்டோபர் 2 அன்று மதுராந்தகம் தொகுதி முழுவதும் திறந்தவெளி வாகனத்தில் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்கிறார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6 அன்று நடைபெறுகிறது. பதிவாகும் வாக்குகள் அக்டோபர் 9 அன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. வேட்புமனுத் தாக்கல் செப்டம்பர் 9 அன்று தொடங்கி 16 அன்று நிறைவடைந்தது.

தவெக சார்பில் தாராபுரம் தொகுதியில் சத்யபாமா போட்டியிடுகிறார். இந்த இடைத்தேர்தலில் தவெக, திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் நாம் தமிழர் கட்சி இடையே ஐந்து முனைப் போட்டி நிலவுகிறது. கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்காக விஜய் நேரடியாகக் களமிறங்கும் நிலையில், மதுராந்தகம் தொகுதிக்கான அவரது இரண்டு நாள் பிரசாரப் பயணத் திட்டம் வெளியாகியுள்ளது.

# விஐடி பல்கலை.யில் கிராவிடாஸ் தொழில்நுட்ப அறிவுசார் விழா: தொடங்கியது செயற்கை நுண்ணறிவை சரியாகப் பயன்படுத்தினால் ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன வங்கதேச துணை தூதர் முகமது அலிமுசமான்!



வேலூர், செப். 20–

செயற்கை நுண்ணறிவை சரியாகப் பயன்படுத்தினால் ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்று சென்னையில் உள்ள வங்கதேச துணை தூதர கத்தின் துணை தூதர் முகமது அலிமுசமான் பேசினார். விஐடி பல்கலைக்கழகத்தில் மூன்று நாள் கிராவிடாஸ் அறிவுசார் விழா தொடங்கி யது.

இதில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சென்னையில் உள்ள வங்கதேச துணை தூதரக துணை தூதர் முகமது அலிமுசமான் பேசியது:

விஐடி பல்கலைக்கழகத்தில் 17–வது பதிப்பில் கிராவிடாஸ் அடியெடுத்து வைத்துள்ளது. இது பல்வேறு வேலைவாய்ப்புகளையும், இளம் தொழில்முனைவோர்களை, ஸ்டார்ட் அப்களை உருவாக்கியுள்ளது.

மாணவர்களின் புதுமை சிந்தனைகள் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளில் துணிவுடன் இருக்க வேண்டும். உங்கள் படைப்புத்திறன் பணிகளில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

மாணவர்கள் ஆர்வத்துடனும் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடனும் போட்டியிட வேண்டும். போட்டிக்காக மாணவர்கள் உருவாக்கும் ஏதேனும் ஒரு விஷயம் ஸ்டார்ட் அப் ஆக மாறக்கூடும். நாம் ஒரு அசாதாரண காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது நிதர்சன உண்மை. செயற்கை நுண்ணறிவு மில்லினியம் சிக்கல்களுக்கு தீர்வு கண்டு வருகிறது. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். அதைச் சரியாகப் பயன்படுத்தினால் ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. தொழில்நுட்பம் புதியதாக இருப்பதன் மூலம் மட்டுமே மதிப்புமிக்கதாக மாறுவதில்லை. அது மக்களை இணைக்கும்போதும், வாழ்க்கையை மேம்படுத்தும் போதும், உண்மையான மனிதப் பிரச்சினைகளைத் தீர்க்கும்போதும் மதிப்புமிக்கதாக மாறுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை வகித்து பேசியதாவது:

வங்கதேசத்துக்கு நெருக்கமானவர்களில் நானும் ஒருவன். 1971–ல் வங்கதேசம் உருவானபோது இந்திய நாடாளுமன்றத்தில் நான் ஒரு ஆதரவாளராக இருந்தேன்.

கடந்த 8 ஆண்டுகளில் தனிநபர் வருமானத்தில் வங்கதேசம் இந்தியாவை பின்னுக்கு தள்ளி முன்னேறியுள்ளது. வங்கதேசத்தில் தனி நபர் வருமானம் 2,900 டாலர்களாக உள்ளன.

இந்தியாவில் தனி நபர் வருமானம் 2,800 டாலர்களாக உள்ளது. பாகிஸ்தான் 1,700 டாலர்களுடன் மிகவும் பின்தங்கியுள்ளது. தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்போது தான் தனி நபர் வருமானம் மேம்படும்.

எச்.சி.எல். நிறுவனம் உலகின் 60 நாடுகளில் செயல்பட்டு வருகிறது. 161 நாடுகளைச் சேர்ந்த 2,24,000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். எச்சிஎல் நிறுவனத்தின் வருவாய் 14 பில்லியன் டாலர்களைத் தாண்டிவிட்டது.

வளர்ந்து வரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். உலகிலேயே அதிக அளவில் ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

அண்டை நாடுகளுடனான நமது உறவை நாம் மேம்படுத்திக் கொள்ள முடிந்தால் ஆயுதம் வாங்கும் பணத்தை கல்வி, சுகாதாரம் மற்றும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்குப் பயன்படுத்தலாம். இதனால் பொருளாதாரம் வளரும். அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதகுலத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, கப்பல்கள் மற்றும் கட்டிடங்களை அழிப்பதற்குப் பதிலாக உற்பத்தித்திறனை அதிகரிக்க ட்ரோன்களைப் பயன்படுத்தலாம். ஜவுளி உற்பத்தியில் இந்தியாவை விட வங்கதேசம் முன்னேற்றம் கண்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். எச்.சி.எல். நிறுவனத்தின் திறமையாளர் தேர்வுப் பிரிவின் நிர்வாகத் துணைத் தலைவர் பிரின்ஸ் ஜெயக்குமார் பேசுகையில், “இந்தியாவில் அவசர நிலை காலத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் வெளியேறிய நிலையில் புதுமை படைக்கும் சூழலில் எச்.சி.எல். நிறுவனம் உருவானது.

எச்சிஎல் நிறுவனம் சொந்தமாக ப்ராசஸர் மற்றும் மதர்போர்டுகள், ஆப்ரேட்டிங் சிஸ்டமை உருவாக்கியது. அடுத்தடுத்து தேவைகளுக்கு ஏற்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை உருவாக்கி வாடிக்கையாளர்களை சென்றடைந்தது. எச்.சி.எல். நிறுவனம் உலகத்துக்காக புதுமைகளை உருவா க்குகிறோம். உண்மையான வாழ்க்கை சிக்கல்களுக்கு தீர்வு காண்கிறோம்.

கிராவிடாஸ் போன்ற நிகழ்வுகளில் பல்வேறு புதிய சிந்தனைகள் பிறக்கின்றன. எப்போதும் புதுமை தொடர்ந்து நிலைத்திருக்கும்.

புதியதாக ஏஐ தொழில்நுட்பம் வந்து கொண்டிருக்கிறது. தொழில்நுட்பத்தின் சக்தி என்பது அந்தப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதுமையானதை உருவாக்குவதாகும்” என்றார்.

தொடர்ந்து சென்னை ஆவடியில் உள்ள போர் வாகனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் போர் வாகன தொழில்நுட்பக் கண்காட்சியை சிறப்பு விருந்தினர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

நிகழ்வில் விஐடி துணை தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், செயல் இயக்குநர் சந்தியா பெண்டாரெட்டி, உதவி துணை தலைவர் காதம்பரி எஸ். விசுவநாதன், ரமணி பாலசுந்தரம் மற்றும் எச்.சி.எல் டெக் நிறுவனத்தின் டிஜிட்டல் வணிக சேவைகள் பிரிவின் உலகளாவிய தலைவர் பவன் வடபள்ளி, கிராவிடாஸ் ஒருங்கிணைப்பாளர் சுதாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஈரானில் ‘கோட் 100’ உச்ச எச்சரிக்கை!

# அனைத்துப் படைகளும் தயார் நிலையில்! அமெரிக்கா பெரும் தாக்குதலுக்குத் திட்டம்?

## மத்திய கிழக்கில் அதிகரிக்கும் பதற்றம்!!



ஈரான், செப். 20–

மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், ஈரான் தனது ஆயுதப்படைகளுக்கு ‘கோட் 100’ என்ற உச்சநிலை எச்சரிக்கையை அறிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. புரட்சிகரக் காவல்படை, ராணுவம் மற்றும் அனைத்துப் பாதுகாப்புப் பிரிவுகளும் முழுத் தயார் நிலையில் இருக்க உத்தரவி டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சவுதி அரேபியா மீது ஹவுதிகள் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, யெமனில் உள்ள ஹவுதி படைகளுக்கு எதிராக அமெரிக்கா பெரிய அளவிலான ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும் என, சிஎன்என் செய்தியை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவின் உதவியை சவுதி கோரிவரும் சூழலில் இந்தச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கேம்ப் டேவிட் சென்றிருந்த அதிபர் டிரம்ப், தனது பயணத்தை முன்கூட்டியே முடித்துக்கொண்டு வெள்ளை மாளிகைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது. அங்கு நடைபெற்ற ஆலோசனைகளில் யெமன் மீதான தாக்குதல் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் அமெரிக்கப் பயணத்தைச் சுருக்கிக்கொண்டு நாடு திரும்பியதாகவும், திட்டமிட்ட டெக்சாஸ் பயணத்தை ரத்து செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்தடுத்து நிகழ்ந்த இந்தப் பயண மாற்றங்கள் பிராந்திய நிலவரம் குறித்த கவனத்தை அதிகரித்துள்ளன.

இதற்கிடையே, இஸ்ரேல், சவுதி அரேபியா, ஈராக், லெபனான், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்கத் தூதரகங்கள் பாதுகாப்பு எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் பயணங்களில் எச்சரிக்கையுடன் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாப் அல் மண்டெப் கடல்வழி மற்றும் எண்ணெய்க் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள், உலகளாவிய எரிசக்தி விநியோகம் குறித்த கவலையையும் தீவிரப்படுத்தியுள்ளன. ரியாத்தில் உள்ள இத்தாலியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அந்நாட்டுத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்காவின் அடுத்த நடவடிக்கை ஈரானை நோக்குமா, ஹவுதி படைகளை நோக்குமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

# தவெக நட்சத்திரப் பேச்சாளர் பட்டியலில் பிற கட்சித் தலைவர்கள்: அதிமுக, பாஜக எதிர்ப்பு!



சென்னை, செப். 20–

தவெகவின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் இடம்பெற்றிருப்பதாக அதிமுகவும் பாஜகவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தவெக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் பிற கட்சிகளின் தலைவர்களும் இடம்பெற்றிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுக எம்.பி. இன்பதுரை கூறியிருப்பதாவது, “வைகோ, திருமாவளவன், மாணிக்கம் தாகூர் ஆகியோர் தனித்தனி அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருக்கும் நிலையில், அவர்கள் மற்றொரு கட்சியான தவெகவின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பது எந்த சட்ட அடிப்படையில்?

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, ஒரு கட்சியின் நட்சத்திரப் பேச்சாளராக தனது சொந்த கட்சியின் உறுப்பினரையே நியமிக்க முடியும்.

மேலும், நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியல் தேர்தல் அறிவிப்பிலிருந்து 7 நாட்களுக்குள் தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்பட வேண்டும். தற்சமயம் அந்த காலக்கெடு முடிந்துவிட்ட பிறகு, இனி இவர்கள் தங்கள் கட்சிகளின் சார்பில் புதிதாக விண்ணப்பித்து தங்கள் பெயரில் அனுமதி பெற்று பிரிவு 77–ன் செலவு விலக்கைப் பெற முடியாது. தங்களது சொந்த கட்சித் தலைவர்களாக அல்லது கூட்டணிக் கட்சி தலைவர்களாக தவெக வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்ய இவர்கள் அனுமதிக்கப்பட்டால், நட்சத்திரப் பேச்சாளர் செலவு விலக்கு இனி இவர்களுக்கு பொருந்தாதது.

எனவே, தேர்தல் ஆணைய விதிகளின்படி இவர்களின் சம்பந்தப்பட்ட உரிய பிரசாரச் செலவுகள் மொத்தமும் தவெக வேட்பாளர்களின் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்பதே சட்டம்.

இவர்களின் பிரசார செலவுகள், தவெக வேட்பாளர்களின் கணக்கில் அவ்வாறு சேர்க்கப்படாமல் இருந்தாலோ, இதன்மூலம் தவெக வேட்பாளர்களின் சட்டபூர்வ தேர்தல் செலவு வரம்பு மீறப்பட்டாலோ, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 பிரிவு 123(6) கீழ் ஊழல் நடவடிக்கை என்பதே தெளிவான சட்டநிலை” என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தவெக நட்சத்திரப் பேச்சாளர் பட்டியலுக்கு பாஜக மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜனும் எதிர்ப்பு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் பிரசாரம் செய்வதற்காக தவெகவின் நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் முதல்வர் விஜய்யுடன் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், விசிக தலைவர் தொல். திருமாவளவன், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, துரை வைகோ, ஐயுஎம்எல் தலைவர் காதர் மொகிதீன், விசிக கட்சியைச் சார்ந்த ரவிக்குமார் எம்.பி., வன்னி அரசு, சிந்தனை செல்வன் போன்ற பிற கட்சிகளின் தலைவர்கள் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. நட்சத்திரப் பேச்சாளர்களைப் பொருத்தவரை அந்தந்த கட்சியை சார்ந்த தலைவர்களை மட்டுமே நட்சத்திர பேச்சாளர்களாக அறிவிக்க முடியும் என்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தினுடைய பிரிவு 77–ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி சட்டத்தினுடைய பிரிவு தெளிவாகல் குறிப்பிட்டு இருக்கும்போது, தமிழக தேர்தல் ஆணையம், தவெக கொடுத்துள்ள 40 பேர் கொண்ட நட்சத்திர வேட்பாளர் பட்டியலில் பிற கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய போர்களைக் கொண்ட அந்த பட்டியலை தவெகவின் நட்சத்திர பேச்சாளர்களாக அங்கீகரித்துள்ளது.

இது தமிழக தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தை விதிமுறைகளை கேலிக்கூத்தாக்கும் செயலாக உள்ளது. சட்டத்தின்படி நடக்க வேண்டிய தேர்தல் ஆணையத்தையும், சட்டத்தையும் கேலிக்கூத்தாக்கி, ஆளுங்கட்சியான தவெகவுக்கு ஆதரவாக செயல்படுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்தி உள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் நடைபெறக்கூடிய மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் நியாயமாகவும் நேர்மையாகவும் நடைபெறுமா என்ற கேள்விக்குறியை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கெனவே, இதேபோன்று ஆம் ஆத்மி கட்சி அதன் உறுப்பினர் அல்லாதவரை நட்சத்திர வேட்பாளராக அறிவித்த விவகாரத்தில் சர்ச்சை எழுந்து, பிறகு கட்சியின் உறுப்பினர் அல்லாதவர் நட்சத்திரப் பேச்சாளராக இருக்க முடியாது என்ற நிலை உருவானது.

எனவே, தமிழக தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள தவெகவின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 20.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 03-ம் தேதி

# மழலைகளின் நலனில் சமரசத்திற்கு இடமில்லை!

ஒரு தாய், தனது குழந்தைக்கான உணவுப் பொருளை வாங்கும்போது, அதற்கான விலையை மட்டும் கொடுப்பதில்லை; தயாரிக்கும் நிறுவனத்தின் மீது தனது நம்பிக்கையையும் வைக்கிறார். அந்த நம்பிக்கைக்கு அடித்தளமாக இருப்பது விளம்பரத்தின் கவர்ச்சியல்ல; ஒவ்வொரு முறையும் உறுதிப்படுத்தப்படும் தரமும் பாதுகாப்புமே. குழந்தைகளுக்கான உணவைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இந்தப் பொறுப்பு மற்றவர்களைவிடக் கூடுதலாக இருக்க வேண்டும்.

இந்தச் சூழலில், நெஸ்லே இந்தியாவின் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள் தொடர்பாக இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமான எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. மூன்று தனித்தனி வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்கியிருப்பது கவனத்திற்குரியது. இரண்டு நடவடிக்கைகள் விளம்பரக் கூற்றுகள் தொடர்பானவை. மற்றொன்று, ஒரு 'பாலோ அப் பார்முலா' மாதிரியில் பயோட்டின் எனப்படும் வைட்டமின் பி7 அளவு நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் ஒத்துப்போகவில்லை என்ற ஆய்வக முடிவு தொடர்பானது. மறுபரிசோதனையிலும் அந்த மாதிரி தரநிலைக்கு ஒத்துவரவில்லை என்று ஆணையம் தெரிவித்துள்ளது. செய்தி ஆதாரம்

இவை விசாரணைக்கும் உரிய தீர்ப்புக்கும் உட்பட்ட குற்றச்சாட்டுகள். வழக்கு தொடங்கப்பட்டதையே இறுதித் தீர்ப்பாகக் கருத முடியாது. அதேநேரத்தில், குழந்தைகளின் உணவு தொடர்பான கேள்விகள் எழுந்திருக்கும்போது, அவற்றை வழக்கமான வணிகச் சர்ச்சையாகக் கடந்துசெல்லவும் முடியாது. 'நான் எக்செல்லா புரோ ஸ்டேஜ் 1' மற்றும் 'லாக்டோஜென் புரோ 1' ஆகியவற்றின் விளம்பரங்களில் இடம்பெற்ற ஊட்டச்சத்துக் கூற்றுகளே கேள்விக்குள்ளாகியுள்ளன. ஒரு பொருளில் குறிப்பிட்ட சத்து இருப்பது பற்றிய தகவலும், அந்தச் சத்து குறித்து விற்பனையைத் தூண்டும் வகையில் முன்வைக்கப்படும் கூற்றும் தனித்தனியாக ஆராயப்பட வேண்டியவை. பெற்றோரின் முடிவை மாற்றக்கூடிய ஒவ்வொரு சொல்லுக்கும் ஆதாரமும் பொறுப்பும் தேவை. தங்கள் தயாரிப்புகளும் லேபிள் விவரங்களும் விதிமுறைகளுக்கு இணங்க இருப்பதாகவும், அதிகாரிகளுடன் தொடர்ந்து ஒத்துழைப்பதாகவும் நெஸ்லே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த விளக்கமும் நியாயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். ஆனால், நிறுவனத்தின் உறுதிமொழி மட்டுமே பெற்றோரின் அச்சத்தைப் போக்கிவிடாது. எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் சரிபார்க்கக்கூடிய விளக்கம் தேவை.

பரிசோதிக்கப்பட்டது எந்தத் தயாரிப்புத் தொகுதி? கண்டறியப்பட்ட மாறுபாட்டின் அளவு என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? பெற்றோர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை ஏதேனும் உள்ளதா? இத்தகைய அடிப்படைக் கேள்விகளுக்குத் தெளிவான பதில்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒரு மாதிரியின் முடிவை வைத்து அனைத்து தயாரிப்புகளும் பாதிக்கப்பட்டவை என்று கூறுவதும் தவறு; அந்த முடிவுக்கான விளக்கத்தை வழங்காமல் இருப்பதும் ஏற்கத்தக்கதல்ல.

கண்காணிப்பு அமைப்பின் பொறுப்பும் வழக்கு தொடங்குவதுடன் முடிந்துவிடுவதில்லை. ஆய்வு முடிவுகளையும் நடவடிக்கையின் முன்னேற்றத்தையும் புரியும் மொழியில் வெளியிட வேண்டும். குறைபாடு உறுதிப்படுத்தப்பட்டால், அதன் தன்மைக்கேற்ப திருத்தம், திரும்பப் பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தேவையா என்பதைத் தீர்மானித்துத் தெளிவுபடுத்த வேண்டும். விதிமீறல் நிரூபிக்கப்பட்டால், நிறுவனத்தின் அளவோ சந்தைச் செல்வாக்கோ நடவடிக்கையைத் தீர்மானிக்கக் கூடாது. குழந்தைகளுக்கான உணவைத் தேர்ந்தெடுக்கும் பெற்றோர் அனைவரும் ஊட்டச்சத்து நிபுணர்களாக இருக்க முடியாது. ஆய்வகப் பரிசோதனை நடத்திவிட்டும் அவர்கள் பொருட்களை வாங்க முடியாது. அதனால்தான் தரநிலைகளும் கண்காணிப்பு அமைப்புகளும் இருக்கின்றன. நிறுவனங்களின் தரக்கட்டுப்பாட்டையும் அரசின் கண்காணிப்பையும் நம்பியே அவர்கள் முடிவெடுக்கிறார்கள். அந்த நம்பிக்கையைப் பாதுகாப்பது இருதரப்பினரின் கடமை.

எனவே, இவ்விவகாரத்தில் தேவை அவசரமான குற்றத்தீர்ப்போ, பொதுவான மறுப்பறிக்கையோ அல்ல. காலவரையறையுடன் கூடிய விசாரணை, வெளிப்படையான முடிவுகள், குறைபாடு இருந்தால் உறுதியான திருத்தம் ஆகியவையே தேவை. விளம்பரங்களால் ஒரு பொருளை விற்கலாம்; வெளிப்படையான செயல்களால் மட்டுமே நம்பிக்கையை நிலைநிறுத்த முடியும். மழலைகளின் நலனில் சமரசத்திற்கு இடமில்லை.

**ஆசிரியர்**
**மதுரை மணி.**

# இந்தியாவுக்கு வரி விதிக்கும் மசோதாவுக்கு டிரம்ப் ஒப்புதல்: 30 நாட்களுக்குள் அமல்!



வாஷிங்டன், செப். 20–

ரஷியாவிடம் எண்ணெய் வாங்கும் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 100 சதவீதம் வரை வரி விதிக்கும் மசோதாவுக்கு டிரம்ப் ஒப்புதல் அளித்து உள்ளார். உக்ரைன் போரை தொடரும் ரஷியாவை வழிக்கு கொண்டு வரும் நோக்கில் அதன் பொருளாதாரம் மற்றும் ராணுவ வலிமையை முடக்க அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது.

எனவே அந்த நாட்டின் தலைமை மற்றும் எரிபொருள் துறை மீது பொருளாதார தடை விதிக்கவும், ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை வரி விதிக்கவும் வகை செய்யும் மசோதா ஒன்றை அமெரிக்கா உருவாக்கியது.

அமெரிக்க செனட் சபையில் கடந்த மாதம் நிறைவேறிய இந்த மசோதா, பிரதிநிதிகள் சபையிலும் கடந்த 16–ந்தேதி நிறைவேறியது. கடந்த ஜூலை மாதம் மரணமடைந்த குடியரசுக்கட்சி எம்.பி. லிண்ட்சே கிரகாமின் பெயரில் உருவாக்கப்பட்ட இந்த மசோதாவுக்கு டிரம்ப் ஒப்புதல் அளித்து உள்ளார். இந்த சட்டம் 30 நாட்களுக்குள் அமலுக்கு வருகிறது. ரஷியா மற்றும் ஈரானுக்கு பொருளாதார தடை விதிக்கும் லிண்ட்சே சட்டத்தில் டிரம்ப் கையெழுத்து போட்டு இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்து உள்ளது. ரஷியாவுக்கு எதிராக பொருளாதார தடைகள், வரி விதிப்புகள் மற்றும் தடை கள் விதிக்கவும், ஈரானுக்கு எதிராக ஏற்கனவே இருக்கும் தடைகளை விரிவுபடுத்தவும் இந்த சட்டம் டிரம்புக்கு அதிகாரம் அளிப்பதாகவும் கூறியிருந்தது. மேலும் ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 100 சதவீதம் வரை வரி விதிக்கவும் இந்த சட்டம் வழிவகுக்கிறது. இந்த சட்டம் அமலுக்கு வருவதற்கு முந்தைய 12 மாத காலத்தில் ரஷியாவில் இருந்து அதிக எண்ணெய் மற்றும் கியாஸ் இறக்குமதி செய்த முதல் 5 நாடுகளுக்கு இந்த வரி விதிக்கப்படும்.

அமெரிக்காவின் புதிய சட்டத்தில் இந்தியா உள்ளிட்ட எந்த நாட்டின் பெயரும் குறிப்பிடவில்லை. ஆனால் ரஷியாவிடம் அதிக எண்ணெய் வாங்கும் நாடுகளில் சீனாவுக்கு அடுத்ததாக இந்தியா உள்ளது. எனவே இந்த சட்டம் இந்தியாவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என தெரிகிறது.

# திமுக முப்பெரும் விழாவா? ஒப்பாரி விழாவா? - தவெக விமர்சனம்!



சென்னை, செப். 20–

திமுக முப்பெரும் விழாவா, ஒப்பாரி விழாவா என்று தவெக ஐடி விங் விமர்சனம் செய்துள்ளது. இது தொடர்பாக தவெக ஐடி விங் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

பேரறிஞர் அண்ணா பற்றி ஒற்றை வார்த்தைகூட உதிர்க்காத மேடையில், எங்கள் தலைவரின் நடை, உடை, பாவனை பற்றி விரிவாக அலசியிருக்கிறார் கொளத்தூரின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். முதல்–அமைச்சரின் ஒவ்வொரு அசைவுகளையும் வீட்டில் அமர்ந்து நீலாம்பரி போல repeat mode–ல் ஓட்டிப் பார்த்து ரசிக்கிறார் போல, முன்னாள்... இந்நாள் ரசிகர்.


கொத்துப் பரோட்டா போட்டதற்காக கொளத்தூர் மக்களுக்கு நன்றி தெரிவித்தவர், எதற்காக 3 முறை re–valuation போட்டார்?. மிசா கைதைப் பற்றி யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்று இப்போது சொல்லும் பொய்ப் பிம்பம், 9 நிமிடக் காணொளியை ஏன் வெளியிட்டாராம்? பதற்றம் பற்றியதில் புலம்பிவிட்டாரோ? Detention copy காணாமல் போய்விட்டதோ? அன்று "வெளிநாட்டு முதலீடா? வெளிநாட்டில் முதலீடா?" என்று வெற்றித் தலைவர் கேட்டபோது, வெற்று வெள்ளைத்தாளைத் தூக்கிக் காண்பித்த மங்காப்புகழ் கொண்ட வரலாறு அவர் ஆட்சியில் தான் நடந்தது என்பதை மறந்தாரோ?

Image buildup–ற்காக Walking with Harry Potter stick (எந்த ஜோசியர் சொன்னாரோ, கையில் குச்சியை எடுத்துப் போகச் சொல்லி), Mini vlog with Insta kids, cycle ride during foreign visits, monovlog videos என நித்தம் ஒரு விளம்பர shooting நடத்தி வந்த Shooting நாயகன், நடிப்பைத் துறந்துவிட்டு மக்கள் பணியாற்ற வந்த நம் வெற்றித் தலைவரைப் பார்த்து "நடிக்கிறார்" என்பது உச்சபட்ச நகைமுரண்!

"ரீல்ஸ் வெறிபிடித்த ஆளுங்கட்சி" என்று ரீல்ஸ்களாக வெளியிட்டு ஒப்பாரி வைக்கிறார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்து மீண்டு வாருங்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு அந்தமான் கடல் பகுதியில் உருவானது காற்றழுத்த தாழ்வுப் பகுதி!



சென்னை, செப். 20

வடக்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதா வது: வடக்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மத்திய வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளது.

அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், செப். 22 ஆம் தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுபெற்று, வடக்கு ஆந்திரம் – தெற்கு ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தமிழகத்தில் நீலகிரி, கோவை, கடலூர், கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை (செப். 20, 21) ஆகிய இரு நாள்கள் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.

மேலும், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சிவகங்கை, ஈரோடு, ராமநாதபுரம், நாமக்கல், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், கரூர், புதுக்கோட்டை, மற்றும் நாகை மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

# 22-ந்தேதி முதல் பழனியில் மீண்டும் ரோப் கார் சேவை தொடக்கம்!



திண்டுக்கல், செப். 20–

பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததால் செப்.22ம் தேதி முதல் மீண்டும் ரோப் கார் சேவை தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக புகழ்பெற்ற பழனி முருகன் கோவில், மலை மீது அமைந்துள்ளது. அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு செல்ல படிப்பாதை, யானைப்பாதை பிரதான வழிகளாக உள்ளன. இதுதவிர பக்தர்கள் மலைக்கோவிலுக்கு எளிதில் சென்றுவர ரோப்கார், மின்இழுவை ரெயில் ஆகிய சேவைகள் பயன்பாட்டில் உள்ளது.

இதில் ரோப்கார் வழியாக விரைவாகவும், பழனி மலையின் இயற்கை அழகை பார்த்து ரசித்தபடியும் செல்லலாம் என்பதால் பெரும்பாலானோர் ரோப்காரில் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் இந்த ரோப்கார் சேவை பக்தர்களுக்கு சிறந்த சுற்றுலா அனுபவத்தை கொடுக்கிறது.

பழனி ரோப்கார் நிலையத்தில் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாதாந்திர, வருடாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவது வழக்கம். அப்போது ரோப்கார் சேவை நிறுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படும்.

அதன்படி பழனி முருகன் கோவில் ரோப்கார் நிலையத்தில், வருடாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக கடந்த 64 நாட்களாக ரோப் கார் சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த காலகட்டத்தில் பக்தர்கள் மின்இழுவை ரெயில், படிப்பாதையை பயன்படுத்தி மலைக்கோவிலுக்கு சென்று வந்தனர். பராமரிப்புப் பணியின் முக்கிய பணிகளான புதிய பெட்டி பொருத்தம், சோதனை ஓட்டம் மற்றும் புனரமைப்புப் பணிகள் போன்றவை நடைபெற்றன. தற்போது பணிகள் அனைத்தும் நிறைவுபெற்றுள்ளநிலையில், வருகிற 22–ந்தேதி முதல் மீண்டும் ரோப் கார் சேவை தொடங்கப்படும் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு
பண்ணைப்புரம் பேரூராட்சி
தேனி மாவட்டம்

தேனி மண்டலம் தேனி மாவட்டம் பண்ணைப்புரம் பேரூராட்சியில் 2026–2027 ஆம் ஆண்டிற்க்கான பொதுநிதி திட்டத்தின் கீழ் பண்ணைப்புரம் பேரூராட்சி பைப்லைன் பதித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை

பேரூராட்சியில் மேற்சொன்னவாறு பொதுநிதி திட்டத்தின் கீழ் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்க்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விவரங்களை தொடர்புடைய பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://www.etenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | : | 23.09.2026 காலை 10.00 மணி முதல் 05.10.2026 மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | : | 05.10.2026 மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | : | 05.10.2026 மாலை 3.30 மணி வரை |

**சேர்மன்**
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

**செயல் அலுவலர்**
பண்ணைப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

வெ.ஆ.எண் 204/2026/செ.ம.தொ.அ./ தேனி/ நாள்: 19.09.2026


# 2 தொகுதிகளில் இடைத்தேர்தல்: அக்டோபர் 6-ந்தேதி பொது விடுமுறை!




சென்னை, செப். 20–

தமிழக அரசின் தலைமைச்செயலாளர் எம்.சாய் குமார் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:– செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் (தனி) மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதிகளுக்கு அக்டோபர் 6–ந்தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி, இந்த 2 சட்டமன்ற தொகுதிகள் அமைந்துள்ள பகுதிகளில் அக்டோபர் 6–ந் தேதி பொது விடு முறை அளிக்கப்படுகிறது.

மேலும், செங்கல்பட்டு, திருப்பூர் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் பணிபுரிந்து வந்தாலும், மதுராந்தகம் (தனி) அல்லது தாராபுரம் (தனி) தொகுதிகளில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ள அனைத்து ஊழியர்க ளுக்கும் அக்டோபர் 6–ந் தேதி சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும். இந்த 2 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு மற்றும் அரசு கட்டுப் பாட்டில் உள்ள நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவ னங்கள் அன்றைய தினம் மூடப்பட்டு இருக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# திருமணம் தாமதமாகிறதா? வாஸ்து குறிப்புகள்!



திருமண ஏற்பாடுகளில் ஈடுபடும் குடும்பங்கள், வீட்டைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரிப்பதில் கவனம் செலுத்துவது வழக்கம். வாஸ்து நம்பிக்கையின்படி, திருமணத்திற்கு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்பே பயன்படுத்தாத மற்றும் பழுதடைந்த பொருட்களை அகற்றுவது நல்லதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, பின்வரும் ஐந்து வகையான பொருட்களை வீட்டில் வைத்திருப்பதைத் தவிர்க்க பரிந்துரைக்கப்படுகிறது.

**1. உடைந்த கண்ணாடி:**

உடைந்த அல்லது விரிசல் ஏற்பட்ட கண்ணாடிகள் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது வாஸ்து நம்பிக்கை. அவற்றை வீட்டிலிருந்து அகற்றலாம். உடைந்த கண்ணாடித் துண்டுகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவது காயங்களைத் தவிர்க்கவும் உதவும். அலங்காரப் பொருட்களில் உள்ள விரிசல்களையும் கவனித்து, தேவையானவற்றை மாற்றலாம்.

**2. ஓடாத கடிகாரம்:**

பழுதாகி நின்ற கடிகாரங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடுப்பதாக வாஸ்துவில் கருதப்படுகிறது. பழுது நீக்க முடிந்தால் சரிசெய்து பயன்படுத்தலாம்; முடியாவிட்டால் அகற்றலாம். முதலில் பேட்டரியைச் சரிபார்ப்பது தேவையற்ற செலவைத் தவிர்க்க உதவும்.

**3. பழைய, கிழிந்த ஆடைகள்:**

அலமாரியில் நீண்டகாலமாகப் பயன்படுத்தாமல் இருக்கும் ஆடைகளைப் பிரித்து வைக்கவும். நல்ல நிலையில் உள்ளவற்றைத் தேவைப்படுபவர்களுக்குத் தானமாக வழங்கலாம். பயன்படுத்த முடியாதவற்றை அகற்றலாம். இதனால் அலமாரியில் இடம் கிடைப்பதுடன், தேவையான ஆடைகளை எளிதாகத் தேர்ந்தெடுக்கவும் முடியும்.

**4. காய்ந்த செடிகள்:**


வாடிய அல்லது முற்றிலும் காய்ந்த செடிகளை அகற்றி, பராமரிக்க ஏற்ற பசுமையான செடிகளை வளர்க்கலாம். இது வீட்டின் தோற்றத்தை மேம்படுத்தும். புதிய செடிகளைத் தேர்ந்தெடுக்கும்போது வீட்டில் கிடைக்கும் வெளிச்சம், இடவசதி மற்றும் பராமரிப்புக்கான நேரத்தையும் கருத்தில் கொள்ளலாம்.

**5. பழுதான மின்சாதனங்கள்:**

பயன்படுத்த முடியாத மின்சாதனங்களையும் துருப்பிடித்த பொருட்களையும் தேவையின்றிச் சேர்த்து வைக்க வேண்டாம். பழுதுபார்க்கக்கூடியவற்றைச் சரிசெய்யலாம்; மற்றவற்றை உரிய மறுசுழற்சி மையங்களில் ஒப்படைக்கலாம். சேதமடைந்த மின்கம்பிகள் உள்ள சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். இந்த மாற்றங்கள் வீட்டைச் சீராகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க உதவும். எனினும், இவற்றை அகற்றுவதால் திருமணத் தடை நீங்கும் என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை. வாஸ்து வழிகாட்டுதல்களை நம்பிக்கை சார்ந்ததாகவே அணுக வேண்டும்.

## சினிமா துளிகள்..!

### தீபிகா படுகோன் – ரன்வீர் சிங் தம்பதிக்கு மீண்டும் பெண் குழந்தை!




பாலிவுட் திரையுலகின் நட்சத்திர தம்பதியான தீபிகா படுகோன் – ரன்வீர் சிங் தம்பதிக்கு கடந்த 2018ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு செப். 8 2024 –இல் பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு 'துவா' எனப் பெயரிட்டனர். துவாவின் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலான நிலையில், தீபிகா படுகோன் இரண்டாவது முறையாக கருவுற்று இருப்பதாக சில மாதங்களுக்கு முன் அறிவித்திருந்தார்.

தீபிகா படுகோனும், ரன்வீர் சிங்கும் அவர்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இந்த மகிழ்ச்சிச் செய்தியைப் பகிர்ந்திருந்தனர். அப்பதிவில், கருவுற்று இருப்பதை பரிசோதனை செய்யும் சாதனத்தை தீபிகாவின் மகள் துவா கையில் பிடித்திருக்கும் புகைப்படத்தை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்திருந்தனர். இந்த நிலையில், ரன்வீர் – தீபிகா தம்பதிக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்துள்ளதாக சமூக ஊடகங்களில் அறிவித்துள்ளனர்.

இந்தியா முழுவதுமுள்ள திரைத்துறையினர் பலரும் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

ரன்வீர் சிங் 'துரந்தர் 2' வெற்றியைத் தொடர்ந்து அடுத்தடுத்த படங்களில் நடித்து வரும் நிலையில், நடிகை தீபிகா படுகோன் அட்லி இயக்கத்தில் அல்லு அர்ஜுனுடன் இணைந்து 'ராக்கா' என்ற படத்தில் நடித்துவருகிறார்.

### ரூ.60 கோடிக்கு 'ஜெயிலர் 2' திரையரங்கு உரிமை?



ரஜினிகாந்த் நடிப்பில் நெல்சன் இயக்கியுள்ள 'ஜெயிலர் 2' படத்தின் கேரளா, கர்நாடகா மற்றும் வட இந்தியத் திரையரங்கு உரிமைகளை கோகுலம் பிலிம்ஸ் ரூ.60 கோடிக்கு வாங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அனிருத் இசையமைத்துள்ள இப்படம் அக்டோபர் 15ஆம் தேதி வெளியாகிறது. உரிமை விற்பனைத் தொகை குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

# அமித்ஷாவுக்கு திடீர் உடல்நலக்குறைவு!



பெங்களூரு, செப். 20–

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அவர் தனது நிகழ்ச்சிகளை ரத்து செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது. கர்நாடக மாநிலத்தில் நேற்று நடந்த பல்வேறு விழாக்களில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இதில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இரவு அமித்ஷா கர்நாடக மாநிலம் உப்பள்ளிக்கு ராணுவ விமானம் மூலம் வந்தார்.

பின்னர் அவர் உப்பள்ளி டவுனில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கினார். நேற்று காலையில் அவர் அங்கிருந்து மருத்துவக்கல்லூரி உள்ளிட்ட கட்டிடங்கள் திறப்பு விழாவுக்கு தயாரானார். அப்போது அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. ரத்த அழுத்தம் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வாந்தி எடுத்ததாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து டாக்டர்கள் குழுவினர் உடனடியாக ஓட்டலுக்கு சென்று அமித்ஷாவுக்கு மருத்துவ பரிசோதனை செய்தனர். சிகிச்சை அளித்தனர். மேலும் அவரை குறைந்தது 2 மணி நேரமாவது ஓய்வு எடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்தினர். அதன்பேரில் அவர் தனது நிகழ்ச்சிகளை ரத்து செய்தார். மேலும் அவர் ஓட்டலிலேயே தங்கினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

அமித்ஷாவை சந்திக்க அந்த ஓட்டல் முன்பு பா.ஜனதாவினர் திரண்டனர். ஆனால் அவர்களை போலீசார் அனுமதிக்கவில்லை. இதற்கிடையே திட்டமிட்டபடி மருத்துவக்கல்லூரியில் புதிய கட்டிட திறப்பு விழா, ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கான கட்டிடம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி மைய கட்டிடம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டது. இதில் மத்திய மந்திரி பிரகலாத் ஜோஷி, கர்நாடக மருத்துவ கல்வி மந்திரி சரணபிரகாஷ் பட்டீல், முன்னாள் முதல்–மந்திரிகள் பசவராஜ் பொம்மை, ஜெகதீஷ் ஷெட்டர், மூவாயிரம் மடத்தின் மடாதிபதி குருசித்த ராஜயோகிந்திரசுவாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேபோல் பெலகாவியில் நடைபெற இருந்த கூட்டுறவு கடன் சங்க கட்டிட திறப்பு விழாவையும் அமித்ஷா ரத்து செய்தார். அந்த கட்டிடத்தையும் பா.ஜனதா தலைவர்கள் திறந்து வைத்தனர். அமித்ஷா உடல் நலக்குறைவால் தொடர்ந்து ஓட்டலிலேயே ஓய்வு எடுத்தார். முன்னதாக நேற்று காலை அமித்ஷாவை ஓட்டலில், கர்நாடக பா.ஜனதா தலைவர் விஜயேந்திரா சந்தித்து பேசினார். இந்த நிலையில் மாலை 5.45 மணியளவில் அமித்ஷா திடீரென அந்த மருத்துவ கல்லூரி, ஆஸ்பத்திரிக்கு சென்று பார்வையிட்டார். சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். அவர் உப்பள்ளி விமான நிலையத்தில் இருந்து நேரடியாக டெல்லிக்கு தனிவிமானத்தில் சென்றுவிட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## மாதவிடாய் வலியால் அன்றாட வாழ்க்கை பாதிக்கிறதா? அலட்சியம் வேண்டாம்!



மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் வலி, படிப்பு, வேலை அல்லது தூக்கத்தைப் பாதிக்கும் அளவுக்குக் கடுமையாக இருந்தால், அதைச் சாதாரணமாகக் கருதக்கூடாது. இது எண்டோமெட்ரியோசிஸ் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சனைகளின் அறிகுறியாக இருக்கலாம்.

கருப்பையின் உட்புறப் படலத்தை ஒத்த திசுக்கள், கருப்பைக்கு வெளியே வளர்வதே எண்டோமெட்ரியோசிஸ். இதனால் வீக்கம், கடுமையான மாதவிடாய் வலி மற்றும் தொடர்ச்சியான இடுப்புப் பகுதி வலி ஏற்படலாம்.

மாதந்தோறும் வலி அதிகரிப்பது, மாதவிடாய் முடிந்தும் நீடிப்பது, உடலுறவின்போது அல்லது சிறுநீர், மலம் கழிக்கும்போது வலி ஏற்படுவது போன்ற அறிகுறிகளைக் கவனிக்க வேண்டும். சிலருக்குக் கர்ப்பம் தரிப்பதிலும் சிரமம் இருக்கலாம்.

கடுமையான வலி இருந்தாலே எண்டோமெட்ரியோசிஸ் என்று அர்த்தமல்ல. காரணத்தை உறுதிப்படுத்த மகப்பேறு மருத்துவரை அணுகுவது அவசியம். அறிகுறிகளின் அடிப்படையில் அல்ட்ராசவுண்ட் உள்ளிட்ட பரிசோதனைகளை மருத்துவர் பரிந்துரைக்கலாம்.

வலியைத் தொடர்ந்து சகித்துக்கொள்வதற்குப் பதிலாக, உரிய மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் பெறுவது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த உதவும்.

# வேலை வாய்ப்பு மத்திய அரசு நிறுவனத்தில் 28 பணியிடங்கள்!




இந்திய சூரிய ஆற்றல் கழகத்தில் (SECI) பொறியாளர், மூத்த பொறியாளர், அலுவலர், கணக்கு அலுவலர் மற்றும் மேலாளர் நிலைப் பதவிகளில் 28 நிரந்தரப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

அறிவிக்கை எண்: 03/2026
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடக்க நாள்: 25.08.2026, காலை 11 மணி
கடைசி நாள்: 23.09.2026, மாலை 5 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்
இணையதளம்: www.seci.co.in

# சவுதி மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்!



ரியாத், செப். 20–

சவுதி அரேபியா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளனர். சவுதி தலைநகர் ரியாத், பிஷா, தைப், பராசன், யன்பு ஆகிய நகரங்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். பொதுமக்கள் குடியிருப்புகள், கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகள், உள்கட்டமைப்புகளை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதல்களை சவுதி வான்பாதுகாப்பு அமைப்பு முறியடித்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த தாக்குதலுக்கு வலிமையான பதிலடி கொடுக்கப்படும் என சவுதி அரேபியா எச்சரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அனல் மின் நிலையத்தில் கொதிகலன் குழாயில் வெடிப்பு: மின் உற்பத்தி பாதிப்பு!


மேட்டூர், செப். 20–

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் இரண்டு பிரிவுகள் செயல்படுகின்றன. முதல் பிரிவில் தலா 210 மெகா வாட் திறன் கொண்ட 4 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 840 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டாவது பிரிவில் 600 மெகா வாட் திறன் கொண்ட ஒரு அலகு செயல்பட்டு வருகிறது.

இதன்மூலம் 600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. முதல் பிரிவில் 2 வது அலகில் கொதிகலன் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக மின் உற்பத்தி தடைபட்டுள்ளது. பழுது நீக்கும் பணியில் பொறியாளர்களும் பணியாளர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று மாலைக்குள் பழுது நீக்கப்பட்டு, மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்படும் என்று மேட்டூர் அனல் மின் நிலைய பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிவாஜி மகள் சாந்தி காலமானார்!



மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் – கமலா கணேசன் தம்பதியின் மூத்த மகளும், திரைப்படத் தயாரிப்பாளருமான சாந்தி காலமானார். சிவாஜி கணேசன் – கமலா தம்பதியினருக்கு ராம்குமார், பிரபு ஆகிய இரு மகன்களும், சாந்தி, தேன்மொழி ஆகிய இரு மகள்களும் உள்ளனர். அதில் மூத்த மகள்தான் சாந்தி. இவரது பெயரில் தான் சென்னையின் அடையாளமாக விளங்கிய சாந்தி தியேட்டர் மவுண்ட் ரோட்டில் 1961 முதல் சிவாஜி குடும்பத்தினரால் நடத்தப்பட்டது.

1968, நவம்பர் 3–ம் தேதி சாந்திக்கும் நாராயணசாமி என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. பின்னர் சாந்தி திரைப்படத் தயாரிப்பிலும் ஈடுபட்டார். சிவாஜி கணேசன் நடித்த புகழ்பெற்ற 'தங்கப்பதக்கம்' (1974) திரைப்படத்தின் தயாரிப்பில் இவரது பங்களிப்பு முக்கியமானது. சிவாஜி (2001), கமலா (2007) ஆகியோரின் மறைவுக்கு பிறகு, குடும்பச் சொத்துப் பங்கீடு தொடர்பான விவகாரத்தில் சாந்தி நாராயணசாமி மற்றும் அவரது சகோதரி தேன்மொழி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகியது குறிப்பிடத்தக்கது.

சாந்தியின் உடல் அஞ்சலிக்காக வளசரவாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. அவரது மறைவுக்குத் திரையுலகினரும், ரசிகர்களும் தங்கள் இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்: சீமான் பிரசாரம்!



சென்னை, செப். 20–

மதுராந்தகம், தாராபுரம், புதுச்சேரி தட்டாஞ்சாவடி ஆகிய 3 தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து களம் காண்கிறது. இந்த தொகுதிகளில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் நாளை (திங்கட்கிழமை) முதல் பிரசாரத்தை தொடங்குகிறார்.

இதுதொடர்பாக நாம் தமிழர் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், '21, 22, 23, அக்டோபர் 3, 4 ஆகிய 5 நாட்கள் தாராபுரம் தொகுதியிலும், 26, 27, 30, அக்டோபர் 1–ந்தேதி ஆகிய 4 நாட்கள் மதுராந்தகம் தொகுதியிலும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரசாரம் மேற்கொள்கிறார்' என்று தெரிவித்துள்ளார். வாகனம் மூலமாகவும், பொதுக்கூட்டம் வாயிலாகவும் அவருடைய பிரசார பயணத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

# அக்.1 முதல் ஆதார் பயோமெட்ரிக் கட்டாயம்!



சென்னை, செப். 20–

மானிய விலையில் எல்பிஜி சிலிண்டர் பெற, அக்டோபர் 1 முதல் ஆதார் பயோமெட்ரிக் சரிபார்ப்பை முடித்திருக்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. போலி இணைப்புகளை நீக்கவும், மானிய சிலிண்டர்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே பயோமெட்ரிக் சரிபார்ப்பை முடித்தவர்கள் மீண்டும் செய்யத் தேவையில்லை. இதுவரை முடிக்காதவர்கள் சிலிண்டர் விநியோக ஊழியர், எல்பிஜி விநியோகஸ்தர் அலுவலகம் அல்லது எண்ணெய் நிறுவனங்களின் மொபைல் செயலிகள் மூலம் சரிபார்ப்பை முடிக்கலாம். பயோமெட்ரிக் சரிபார்ப்பை மேற்கொள்ள விரும்பாதவர்களுக்கும் சிலிண்டர் கிடைக்கும். ஆனால், அவர்கள் மானியம் இல்லாமல் சந்தை விலையில் சிலிண்டரை பெற வேண்டியிருக்கும். தகுதியான பயனாளிகளுக்கு மட்டுமே மானியம் சென்றடைவதை உறுதி செய்வதே இதன் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்வர் விஜய் ஆலோசனை!



சென்னை, செப். 20–

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நாளை (செப்.21) முதல்வர் விஜய் ஆலோசனை நடத்துகிறார். காவிரி படுகை, கடலோர மாவட்ட ஆட்சியர்கள் காணொளி வாயிலாக ஆலோசனையில் பங்கேற்கவுள்ளனர். துறைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது

# ஆசிய விளையாட்டு: வெள்ளி வென்றார் இளவேனில்!



ஆசிய விளையாட்டுப் போட்டியில் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் தனி நபர் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் வென்றார்.

இறுதிப் போட்டியில் 252.4 புள்ளிகள் பெற்று நூலிழையில் தங்கப் பதக்கத்தை அவர் தவறவிட்டார். இதன்மூலம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா வென்றுள்ள 2ஆவது பதக்கம் இதுவாகும்.

ஏற்கெனவே 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இந்திய மகளிர் அணி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.

அதேசமயம் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் சீன வீராங்கனை தைச்சி 253 புள்ளிகள் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். ஜப்பானின் ஐச்சி–நகோயாவில் ஆசியப் போட்டி 2026 சனிக்கிழமை கோலாகலமாகத் தொடங்கியது.

இதனை ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ போட்டிகளை தொடங்கி வைத்தார். ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் பங்கேற்கும் ஆசியப் போட்டிகள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து ஊராட்சிகளிலும் அக்டோபர் 2-ந் தேதி கிராமசபை கூட்டம்!




சென்னை, செப். 20–

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:– காந்தி ஜெயந்தியான அடுத்த மாதம் (அக்டோபர்) 2–ந் தேதி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடத்த வேண்டும். இதில் கிராம ஊராட்சியின் நிர்வாகம், நிதிநிலை, வளர்ச்சிப்பணிகள், குடிநீர், தூய்மை, சுகாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறி த்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும்.

கிராமசபை கூட்டம் காலை 11 மணியளவில் நடத்த வேண்டும். கூட்டம் நடைபெறும் இடம், நேரம் மற்றும் விவாதிக்கப்படும் பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். கிராமசபையின் ஒப்புதலுடன் பிற முக்கிய பொருட்களையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை முறையாக பதிவு செய்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


# இருமல் மருந்து பாட்டில்களில் எச்சரிக்கை வாசகம்!



சென்னை, செப். 20–

இருமல் மற்றும் சளி மருந்துகளை இளம் குழந்தைகளுக்கு விவேகத்துடன் பரிந்துரைக்க வேண்டும் எனவும் குறிப்பாக 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பரிந்துரைப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் சுகாதாரப்பணிகள் இயக்குனரகம் கடந்த ஆண்டு பரிந்துரைத்தது. இதைத்தொடர்ந்து 4 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சில குறிப்பிட்ட கலவை மருந்துகள் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்தது. இந்த நிலையில் இருமல் மற்றும் சளி மருந்துகளை 4 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பயன்படுத்துவதற்கு எதிரான எச்சரிக்கை வாசகத்தை அந்த மருந்து பாட்டில் லேபிள்களில் அச்சிட மருந்து ஆலோசனைக் கமிட்டியிடம் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

இது ஏற்கப்பட்டால் விரைவில் இந்த வாசகங்களுடன் இருமல் மற்றும் சளி மருந்து பாட்டில்கள் விற்பனைக்கு வரும் என அதிகாரிகள் தெரிவித்தனர். சில மாதங்களுக்கு முன்னர் மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் கலப்படம் செய்யப்பட்ட இருமல் மருந்துகளால் குழந்தைகள் உயிரிழந்த சம்பவங்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மது பிரியர்களுக்கு அதிர்ச்சி செய்தி: ரூ.500-க்கு மேல் ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்க முடியாது..!




சென்னை, செப். 20–

தமிழகத்தில், மதுபான ஆலை முதல், மது கடைகளில் விற்பது வரை கணினிமயமாக்கும் திட்டம், 2024ல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கடையில் விற்கப்படும் ஒவ்வொரு மது பாட் டிலும், கையடக்க வடிவில் உள்ள கருவியில், 'ஸ்கேன்' செய்து விற்கப்படுகிறது. இதன் வாயிலாக, 'கியூ.ஆர். குறியீடை ஸ்கேன்' செய்து, டிஜிட்டல் முறையிலும் பணம் செலுத்தலாம்.

இருப்பினும், மது கடைகளில் தினமும் சராசரியாக, 150 கோடி ரூபாய்க்கும், வார, விசேஷ விடுமுறை நாட்களில், அதை விட அதிகமாகவும் விற்பனை உள்ள நிலையில், 80 சதவீதத்திற்கு மேல் ரொக்க பணம் தான் வசூலாகிறது. அந்த பணத்தை பணியாளர்கள், கடைகளில் இருப்பு வைத்து, அடுத்த நாள் வங்கியில் செலுத்துகின்றனர். அவ்வாறு எடுத்துச் செல்லும் பணத்தை கொள்ளை அடிப்பதும் நடக்கிறது.

தற்போது, மதுபிரி யர்கள் தாங்கள் விரும்பும் மது வகைகளை, டாஸ்மாக் இணையதளத்தில் தேர்வு செய்து, அதன் வாயிலாகவே பணமும் செலுத்தி, அதற்கான குறியீட்டை கடைகளில் காட்டி, மது வகைகள் வாங்கலாம். இந்த முறையில் வாங்குவோருக்கு, மது பாட்டில்களை வழங்க தாமதம் செய்யப்படுவதாக புகார்கள் எழுகின்றன. இதற்கு, ரொக்க பணம் வசூலிக்க, பணியாளர்கள் ஆர்வம் காட்டுவதே முக்கிய காரணமாக இருப்பதாக, டாஸ்மாக் கண்டறிந்துள்ளது.


எனவே, ரொக்க பணப் புழக்கத்தை குறைத்து, டிஜிட்டல் பரிவர்த்தனையை அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதுகுறித்து, டாஸ்மாக் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

கடைகளில் மது பாட்டிலை கூடுதல் விலைக்கு விற்பதை தடுக்கவும், சில்லரை தட்டுப்பாட்டு போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணவும், டிஜிட்டல் பண பரிவர்த்தனை அதிகரிக்கப்பட உள்ளது. இதற்காக, 500 ரூபாய் வரை மட்டுமே ரொக்க பணமாகவும், அதற்கு மேல் டிஜிட்டல் முறையில் வசூலிக்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதுதொடர்பாக, விரைவில் கடை களுக்கு அறிவுரைகள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.




# இன்றைய கார்ட்டூன்




# டாஸ்மாக் ஊழியர்களுக்கு சீருடைப்படி!

சென்னை, செப். 20–

தமிழகத்தில் எலைட் டாஸ்மாக் கடைகளில் நடைமுறையிலுள்ள சீருடை திட்டம், அனைத்து சாதாரண கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. நவம்பர் 15 முதல் ஊழியர்கள் கட்டாயம் சீருடை அணிய வேண்டும் என மேலாண் இயக்குநர் நந்தகுமார் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.




ஆண்டுக்கு மூன்று செட் சீருடைகள் தைக்க, ஒரு செட்டுக்கு ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ.6,000 வழங்கப்படும். 202627 நிதியாண்டுக்கான தொகை செப்டம்பர் 30–க்குள் ஊழியர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். மாவட்ட வாரியான ஊழியர் பட்டியலை செப்டம்பர் 22–க்குள் சமர்ப்பிக்க மாவட்ட மேலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்பார்வையாளர்களுக்கு வெளிர் நீலச் சட்டை, நேவி ப்ளூ பேண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு பீஜ் நிறச் சட்டை, அடர் நீல பேண்ட் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைவரது சட்டையின் இடது மார்புப் பகுதியிலும் டாஸ்மாக் முத்திரை இடம்பெற வேண்டும். சட்டையை 'டக்–இன்' செய்தோ, செய்யாமலோ அணியலாம்.

துணியின் நிறம், தரத்தில் மாறுபாடுகளைத் தவிர்க்க கோ–ஆப்டெக்ஸ் மூலம் துணிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஊழியர்கள் மாவட்டத் தலைநகரங்களிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனையகங்களில் அக்டோபர் 31–க்குள் துணிகளை வாங்கி, நவம்பர் 10–க்குள் தைத்து முடிக்க வேண்டும். அடுத்தடுத்த நிதியாண்டுகளில் ஏப்ரல் 1 அன்று சீருடைப்படி வங்கிக் கணக்கில் விடுவிக்கப்படும். இந்த நடைமுறை மூலம் டாஸ்மாக் கடைகளின் நிர்வாகத்தில் சீரான அமைப்பும் தொழில்முறையும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான காலக்கெடுவைப் பின்பற்றி சீருடைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




இராமநாதபுரம் மாவட்ட அரசு சட்டக்கல்லூரியில் நடந்த முதலாமாண்டு பட்டமளிப்பு விழாவில் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமாருடன் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஆர். பூர்ணிமா மற்றும் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஜேம்ஸ் ஜெயபால் அவர்கள், மற்றும் பேராசிரியர்கள் ஆகியோருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# சில்லறை விற்பனை கடைகளுக்கு மது வகைகளை அனுப்பும் நடைமுறையில் மாற்றம்!

சென்னை, செப். 20–

தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தால் 4,765 மதுபான சில்லறை விற்பனை கடைகள் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. சில்லறை விற்பனை வாயிலாக ஒரு நாளைக்கு சராசரியாக 100 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைக்கும் நிலையில் வார விடுமுறை மற்றும் தீபாவளி போன்ற விசேஷ நாட்களில் பல மடங்கு விற்பனை அதிகரிக்கும்.






அதே நேரத்தில் குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்களின் மதுபானங்கள் மட்டுமே சில்லறை விற்பனை கடைகளில் விற்பனைக்கு வருவதாக சொல்லப்படுகிறது. இதனையடுத்து தவெக அரசு ஆட்சியில் அனைத்து மதுபான நிறுவனங்களிடம் இருந்தும் சம அளவில் மதுபானம் வாங்கப்பட்டு அனைத்து வகை மதுக்களும் விற்கப்படும் என அமைச்சர் விக்னேஷ் கூறியிருந்தார். இதுதொடர்பாக டாஸ்மாக் நிர்வாகம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருந்தது.

இந்த நிலையில், டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு மது வகைகளை அனுப்பும் நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாளை முதல் ஒவ்வொரு கடையின் உண்மையான தேவை மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் மட்டுமே மது பாட்டில்களை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அமலில் இருந்த அனைத்து சப்ளையர்களின் பொருட்களையும் கடைகளுக்கு சமமாக பிரித்து வழங்கும் முறை நிறுத்தப்படுகிறது.

மூத்த மண்டல மேலாளர்கள் மாவட்ட மேலாளர்கள், கிடங்கு மேலாளர்கள், உத்தரவை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் புதிய முறையின் மூலம் கடைகளில் தேங்கும் விற்பனையாகாத மதுக்கள் குறையும் என்றும் விற்பனை அதிகம் உள்ள பிராண்டுகள் தேவைக்கேற்ப கிடைக்கும் என்றும் டாஸ்மாக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஆட்டோ கட்டணம் உயர்வு: 23-ந்தேதி கருத்து கேட்பு கூட்டம்!

சென்னை, செப். 20–

தமிழகத்தில் ஆட்டோ கட்டணம் உயர்வு தொடர்பாக வரும் 23–ந்தேதி அனைத்து மாவட்டங்களிலும் கருத்து கேட்பு கூட்டம் நடத்த போக்குவரத்து ஆணையரகம் உத்தரவிட்டுள்ளது.



தமிழகத்தில் ஓடும் 3.46 லட்சம் ஆட்டோக்களுக்கு 2013–ம் ஆண்டு 1.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.25–ம், அடுத்த ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் தலா ரூ.12–ம் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. புதிய கட்டணம் நிர்ணயம் குறித்து, அனைத்து மாவட்டங்களிலும், நுகர்வோர் அமைப்புகளுடன் கருத்து கேட்பு கூட்டம், வரும் 23–ந் தேதி நடத்த வேண்டும் என, கலெக்டர்களுக்கு போக்குவரத்து ஆணையரகம் உத்தரவிட்டுள்ளது. தமிழக முற்போக்கு நுகர்வோர் மையத் தலைவர் சடகோபன் கூறியதாவது:

ஆயுத பூஜை, தீபாவளி போன்ற பண்டிகை நாட்கள் அடுத்தடுத்து வருவதால், இனியும் தாமதம் இன்றி, ஆட்டோ கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும். குறைந்தபட்ச கட்டணமாக ரூ.45 நிர்ணயம் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.20 வரை வசூலிக்க வேண்டும். அனைத்து ஆட்டோக்களிலும் 'டிஜிட்டல் மீட்டர்' மற்றும் ஜி.பி.எஸ். கருவிகள் கட்டாயம் பொருத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவில் அர்ச்சகர்கள் புரோகிதர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும்: பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் தீர்மானம்!

பழனி செப்டம்பர் 20 –

கோவில் அர்ச்சகர்கள் புரோகிதர்கள் வேதியர்கள் பூசாரிகளின் வாழ்வா தாரத்தை பாதுகாக்க, நல வாரியம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு பிராமண சமாஜம் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜம் சார்பில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.



இதற்கு மாநிலத் தலைவர் என் ஹரிஹரமுத்து ஐயர் தலைமை வகித்தார். இதில் மாநிலச் செயலாளர் ரமேஷ்குமார், மாநில பொருளாளர் வைத்தியநாதன், நிர்வாகிகள் சுந்தரேச குருக்கள், வழக்கறிஞர் அனிருத் கர்கா உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு. நேபாள நாட்டில் வெள்ளத்தில் உயிரிழந்த மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இந்து சமய அறநிலையத்துறை கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு இளநிலை உதவியாளருக்கு இணையாக மாதாந்திர அடிப்படைச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். சர்ச் பணியாளர்கள் நலவாரியத்தைப் போல, இந்து கோவில் அர்ச்சகர்கள் புரோகிதர்கள் வேதியர்கள் பூசாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நல வாரியம் அமைக்க வேண்டும். பொருளாதாரத்தில் பின்தங்கிய பொது பிரிவினருக்கு தமிழக அரசு 10% ஒதுக்கீடு வழங்க வேண்டும். மேலும் கிருஷ்ணர் ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி உள்ளிட்ட இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவித்த தமிழக முதல்வர் விஜய்க்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு பிராமண சமாஜம் மாநிலத் தலைவர் என் ஹரிஹரமுத்து ஐயருக்கு அந்தணர் செம்மல் விருது வழங்கப்பட்டது.

### தமிழக அரசு போக்குவரத்து கழகம், சேலம் கோட்டம் சார்பில்

# நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் பேருந்து போக்குவரத்து துவக்க விழா!




நாமக்கல், செப். 20–

தமிழக அரசு போக்குவரத்து கழகம், சேலம் கோட்டம் சார்பில், நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் பேருந்து போக்குவரத்து துவக்க விழா, நாமக்கல் பழைய பேருந்து நிலையத்தில் நடந்தது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ.க்கள் திலீப், சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் லோகேஸ் தமிழ்செல்வன் ஆகியோர் நீட்டிக்கப்பட்ட வழித்தடத்தில் நகரப்பேருந்து போக்குவரத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். தொடர்ந்து, நாமக்கல் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து, செவ்வந்திப்பட்டி வரை இயக்கப்படும், 15ஏ நகர பேருந்து, ஏ.மலைப்பட்டி வரையும், பொன்னேரி கைகாட்டி வரை இயக்கப்பட்டு வந்த 13பி நகர பேருந்து, காவக்காரன்பட்டியில் இருந்து ஈச்சவாரி, கோணங்கிப்பட்டி, எருமப்பட்டி, பொன்னேரி கைகாட்டி வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல் பழைய பேருந்து ஸ்டாண்டில் இருந்து, வரதராஜபுரம் வரை இயக்கப்பட்ட 13ஏ நகர பேருந்து, வரதராஜபுரத்தில் இருந்து, தலைமலைப்பட்டி அடிவாரம் வரையும், ராசிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து, நாமகிரிப்பேட்டை வரை இயக்கப்பட்ட, ஆர்.19 நகர பேருந்து, அக்கலாம்பட்டி வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் நாமக்கல் மாநகராட்சி ஆணையர் செல்வ பாலாஜி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மழை இல்லாத நிலையிலும் டெங்கு காய்ச்சல் பரவுவது ஏன்? அதிர்ச்சி தகவல்!




சென்னை, செப். 20–

மழைக்காலம் என்றாலே டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிக்கும் என்ற எண்ணம் பொதுமக்களிடம் உள்ளது. ஆனால் தற்போது பல இடங்களில் பெரிய அளவில் மழை பெய்யாத நிலையிலும் டெங்கு பாதிப்பு ஏற்படுவது ஏன் என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. இதுகுறித்து சுகாதார நிபுணர்கள் கூறியதாவது:–

மழை இல்லாத காலங்களில் பொதுமக்கள் குடிநீருக்காக தண்ணீரை சேமித்து வைப்பது வழக்கம். குடங்கள், வாளிகள், தண்ணீர் தொட்டிகள், பிளாஸ்டிக் பாத்திரங்கள் உள்ளிட்டவற்றில் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டிருந்தால் அவற்றிலும் ஏடிஸ் கொசுக்கள் முட்டையிட வாய்ப்பு உள்ளது.

மேலும், பூந்தொட்டிகளின் அடிப்பகுதியில் தேங்கும் தண்ணீர், பழைய டயர்கள், தூக்கி வீசப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் ஓடுகள், கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்டவற்றில் சிறிதளவு தண்ணீர் தேங்கினாலும் அவை கொசு உற்பத்தி இடங்களாக மாறிவிடும். ஏடிஸ் கொசுக்கள் பெருகுவதற்கு அதிக அளவு தண்ணீர் தேவையில்லை. பெண் ஏடிஸ் கொசு தண்ணீர் உள்ள பாத்திரத்தின் உட்புறச்சுவரில், தண்ணீர் மட்டத்திற்கு சற்று மேலே முட்டைகளை இடுகிறது. அந்த முட்டைகள் பாத்திரத்தின் சுவரில் ஒட்டிக்கொண்டு இருக்கும். பின்னர் அந்தப்பாத்திரத்தில் இருந்த தண்ணீர் வற்றிவிட்டாலும் முட்டைகள் உடனடியாக அழிந்து விடுவதில்லை. அவை வறண்ட நிலையிலும் பல மாதங்கள் உயிருடன் இருக்கக்கூடும். மீண்டும் அந்தப் பாத்திரத்தில் தண்ணீர் தேங்கும்போதுமுட்டைகள் பொரிந்து புழுக்களாக மாறுகின்றன. பின்னர் அவை வளர்ந்து கொசுக்களாக உருவாகின்றன. இதனால், "இப்போது மழை பெய்யவில்லை; எனவே டெங்கு கொசு உற்பத்தியாகாது" என்று நினைப்பது தவறாகும். எனவே, மழை இல்லாத காலங்களிலும் டெங்கு தடுப்பில் வீடு களில் சேமித்து வைக்கப்படும் தண்ணீருக்கு அதிக முக்கியத் துவம் அளிக்க வேண்டும். தண்ணீர் தொட்டிகளை முழுமை யாக மூடி வைக்க வேண்டும். குடங்கள், வாளிகள் உள்ளிட்ட பாத்திரங்களில் தண்ணீர் சேமித்து வைத்திருந்தால் அவற்றையும் மூடி வைக்க வேண் டும். தண்ணீர் காலியானதும் பாத்திரங்களை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு சுகாதார நிபுணர்கள் கூறினர்.

# டெங்கு பாதிப்பால் ஏற்படும், உயிரிழப்பை கட்டுப்படுத்த போர்க்கால அடிப்படை தேவை: கொமதேக பொதுச்செயலாளர் ஈஸ்வரன் அறிக்கை!

நாமக்கல், செப். 20–

தமிழகத்தில் டெங்கு பாதிப்பால் ஏற்படும், உயிரிழப்பை கட்டுப்படுத்த, தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொமதேக வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு தீவிரமாக பரவி வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தின் 3 மாணவர்களோடு சேர்த்து, இதுவரை சுமார் 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒரே நாளில் 200க்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்து வருகின்றனர். டெங்கு பரவலை தடுக்க தமிழக அரசின் தற்போதைய நடவடிக்கைகள் போதாது. வருமுன் காப்பதே மிகச்சிறந்தது என்பதை அரசு உணர வேண்டும். தமிழக அரசு டெங்கு பாதிப்பை தடுக்க கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ள வேண்டும்.



பருவநிலை மாற்றத்தால், தற்போது சாதாரண காய்ச்சலும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. குறிப்பாக சளி, இருமல், உடல் சோர்வு ஆகியவையும் பொதுமக்களுக்கு அதிக அளவில் ஏற்படுகிறது. சென்னையில் பரவியுள்ள டெங்கு காய்ச்சல் தமிழகத்தின் பிற பகுதிகளில் பரவுவதற்கு முன்பு, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியம்.

அனைத்து மாவட்ட மற்றும் தாலுகா ஆஸ்பத்திரிகளில் தேவையான சிகிச்சை வசதிகளை அதிகரிப்பதுடன், சுகாதார பணியாளர்கள் மூலம் டெங்குவை ஒழிக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள, பணியாளர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்: கலெக்டர் தகவல்

நாமக்கல், செப். 20–

டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள, பணியாளர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி, கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் மதுபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: நாமக்கல் மாவட்டத்தில் டெங்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தபட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் 747 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் மூலம் கொசுப்புழு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டெங்கு மற்றும் காய்ச்சல் நோயாளிகள் கண்டறியப்படும் பகுதிகளில், கொசு மருந்து அடிக்கும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.




தண்ணீர் சேமிக்கும் தொட்டி கள் மற்றும் பாத்திரங்களை கொசுக்கள் புகாத வகையில் மூடி வைக்க வேண்டும். பயன்பாடற்ற டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், பிளாஸ்டிக் பொருட்கள், பூந்தொட்டிகள் உள்ளிட்டவற்றில் தண்ணீர் தேங்காமல் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டால் சுயமாக மருந்துகளை உட்கொள்ளாமல், அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனைகளை அணுகி உரிய சிகிச்சை பெற வேண்டும். மேலும், வீடு வீடாகச் சென்று கொசுப்புழு ஒழிப்புப் பணிகளில் ஈடுபடும் டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கு, பொதுமக்கள் தேவையான ஒத்துழை ப்பை வழங்க வேண்டும். டெங்கு தடுப்பு என்பது அரசுத் துறைகள் மட்டுமின்றி, பொது மக்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ள வேண்டிய கூட்டு முயற்சி யாகும். எனவே, கொசு உற்பத்தியைத் தடுக்கும் பணியில் பொதுமக்கள் அனைவரும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020